
ஸ்ரீ:

விளம்பி ஹு மாசி மீ
பிப்ரவரி - மார்ச் 2019


மலர்: 1
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்



MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com



ஸ்ரீ:

விளம்பி ௵ மாசி ௴
பிப்ரவரி - மார்ச் 2019

மலர்: 1
இதழ்: 11

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 8.00 - திருவாராதனம், 9.00 - சயநம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri P.S. Anand & Sri Rajagopalan Madhavan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்$^{3}$ரி ஸமம் ஸ்தா$^{2}$நம் ப்$^{3}$ரஹ்மாண்டே$^{3}$ நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே$^{3}$வோ ந பூ$^{4}$தோ ந ப$^{4}$விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள் !

உத்தராயணத்துக்காக பிதாமஹர் ஸ்ரீபீஷ்மர் மட்டும் காத்திருக்கவில்லை; உத்ஸவங்களும்தான் காத்துக்கிடந்தன. அதையொட்டி நம் ஸந்நிதியிலும், தை ஒரு திங்களில், உத்தராயண புண்யகாலம் தொடங்கி, ரதஸப்தமி வரையில் தொடர் உத்ஸவ-மாரிதான். அவற்றின் பட்டியல் இதோ :-

- ✓ போகி – திருக்கல்யாண உத்ஸவம்
- ✓ கனு சேர்த்தி உத்ஸவம்
- ✓ பரிவேட்டை உத்ஸவம்
- ✓ திருமழிசைப்பிரான் வார்ஷிக உத்ஸவம்
- ✓ கூரத்தாழ்வான் வார்ஷிக உத்ஸவம்
- ✓ வனபோஜன உத்ஸவம்
- ✓ இத்துடன் நான்கு தை-வெள்ளிக்கிழமைகளில் தாயார் வாஹந உள்புறப்பாடு; தை அமாவாஸை அன்று மஹோதய புண்யகாலத்தை முன்னிட்டு எம்பெருமான் ஸமுத்ரத்தில் விசேஷ தீர்த்தவாரி
- ✓ தை ச்ரவண புறப்பாடு
- ✓ தை சதயம் பேயாழ்வார் மாஸ உத்ஸவம்

இத்திருவிழாக்களின் நிழற்படங்களும் / சென்ற மார்கழி மாதக் கடைசி நாளன்று நடந்தேறிய ஆண்டாள் திருக்கல்யாண / போகி உத்ஸவங்கள், திருப்பாவை உபந்யாஸ பூர்த்தி காக்ஷிகளும் வண்ணக் கோலத்தில் இவ்விதழில் ஸேவித்து இன்புறலாம்.

இத்துடன், குலசேகரப்பெருமானின் ப்ரபந்தச் சிறப்பை விளக்கும் கட்டுரை; சரணாகதி செய்வதின் பொருத்தமும் / ஏற்றமும் சொல்லும் வ்யாஸம்; திருக்கோயிலில் அர்ச்சக-கைங்கர்யம் செய்பவர்களின் profile; மற்றும் வழக்கமான சிறுவர் பகுதியில், வேதாந்தாசார்ய-மங்களத்தைப் பற்றி பாட்டி உரையாடல் இவை இடம்பெறுகின்றன.

கண்டும் வாசித்தும், களிப்போம்.

# IMPORTANCE OF TEMPLES MANAGEMENT

FROM THE DESK OF TRUSTEES

Visiting Temple is part and parcel of our life. It is true that God lives in the temple not as a mere statue or an image, but as a living and breathing entity. The temple administration must, through a host of Archakas, Kainkaryaparas and attendants, ensure that He is served with great honour, devotion and diligence, and treated respectfully like a king from the time He wakes up in the early hours until He goes to bed.

The temple, for all practical purposes, is a universe in itself where the Gods dwell and interact with humans at a very personal and intimate level. The expression idol worship in Hinduism is a complete misnomer, used by some to degrade the religion.

In **Sanatha Dharma,** we do not worship mere stones or wooden idols, but **worship a living and breathing form of God** who lives inside the body that is made of stone, wood or other materials. Because of it, they are treated with utmost respect, as if God is present personally to bless the devotees. Their power and eminence depend upon how long they are present on earth, how they are installed and how many people offer them regular worship.

A deity's power increases in proportion to the fervour of His or Her devotees. More the number of devotees visiting a temple and frequently worshipping the deity, the more power is gained by the God from the offerings made. Thus the deity develops the ability to fulfil the wishes of the worshippers.

In other words, although the same deity resides in several temples, in each temple the deity has a different potency. If they are regularly worshipped, they become active and powerful, radiate positive energy, strengthen the roots of dharma, and help more people to become spiritual and work for their liberation.

Therefore, it becomes the duty (dharma) of every Hindu to visit temples and offer worship. Similarly, the temples have to ensure that the deities are regularly worshipped and more devotees are attracted to them. It cannot happen unless the worship is conducted according to the Agama Sasthras and by Archakas who are well-versed in the rituals. With their knowledge and prayers, they can keep the deities well nourished and well attended. It is also essential that the temple has to be kept clean and tidy always.

**Voluntary service**

As an abode of God, a temple is also an institution. It requires an organised and professional approach to manage the temple activities. In this regard, our Temple is blessed with various voluntary institutions pertaining to **Veda Parayanam, Adhyapakam and Sripada Kainkaryam,** and so on. The selfless service of the office-bearers and members of these associations in carrying out the day to day activities and rituals at our temple is worth mentioning.

We also wish to thank the devotees who participate in large numbers in all our festivities and also keep our temple neat.

Starting with this issue, there will be feature articles on our Archakars, Kainkaryaparas and other voluntary institutions who are all pillars of our Temple.

**Invoking Varuna**

The rains have failed during the last monsoon in the city and the repercussions have already started. The water levels are fast receding and the picture for the future is scary. Prayers are a mode of seeking remedy for any adverse situation. Hence, the temple management has initiated a drive – continuous group chanting of the Thiruppaavai verse **'Azhimazhaik Kanna'** as frequently as possible. The first two sessions were held on Feb. 2 and 10.

In another such measure, the temple organised a discourse on **'Virata Parva'** of the Mahabharata by Sri U. Ve. Karunakarachariar Swami which was at Desika Bhavanam on Feb. 10.

We fervently hope the Lord answers our prayers!

ஸ்ரீ:

# விளம்பி வருட மாசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | |
|---|---|---|---|---|---|---|
| பிப்ரவரி / மார்ச் | மாசி | | | | | |
| 13.02.19 | 1 | நவமி | புதன் | கார்த்திகை | மாதப்பிறப்பு – காலை – பெருமாள் திருமஞ்சனம் – மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ இராமகிருஷ்ண கனபாடிகள் – ஸ்ரீ N.R.S. ஸ்ரீராமன் |
| 14.02.19 | 2 | தசமி | வியாழன் | ரோஹிணி | கண்ணன், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் | |
| 15.02.19 | 3 | ஏகாதசி | வெள்ளி | மிருகசீரீஷம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ V. சேஷாத்ரி |
| 16.02.19 | 4 | ஏகாதசி (1.05) / த்வாதசி | சனி | திருவாதிரை | காலை – பெருமாள் திருமஞ் சனம் – மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ திருக்கண்ண மங்கை தேவநாதாச் சார் – C/o. ஸ்ரீ G. காகுத்தன் |
| 17.02.19 | 5 | த்ரயோதசி | ஞாயிறு | புனர்வஸு | தவனோத்ஸவம் 1ம் நாள் – குலசேகராழ்வார் திருநக்ஷத்ரம் – காலை – பெருமாள், தாயார், குலசேகராழ்வார் திருமஞ் சனம் – மாலை – பெருமாள், குலசேகராழ்வார் திருவீதி புறப்பாடு, பின்பு தாயாருடன் ஆஸ்தானம் – ஸேவாகாலம், சாற்றுமுறை | குலசேகராழ்வார் திருமஞ்சனம் – ஸ்ரீ T.C. ரங்கராஜன் குடும்பம் – C/o. ஸ்ரீ R. சுந்தர் – புறப்பாடு – சாற்றுமுறை – ஸ்ரீமதி ஸ்ரீநிதி மோஹன் – தவனோத்ஸவம் – ஸ்ரீ P.R. ஸ்ரீநிவாஸன் |
| 18.02.19 | 6 | சதுர்த்தசி | திங்கள் | புஷ்யம் | தவனோத்ஸவம் 2ம் நாள் – காலை பெருமாள், தாயார் திருமஞ்சனம் – மாலை – ஆஸ்தானம் | ஸ்ரீ V. நரசிம்மன் – ஸ்ரீ V. உப்பிலியப்பன் |
| 19.02.19 | 7 | பௌர்ணமி | செவ்வாய் | ஆயில்யம் | தவனோத்ஸவம் 3ம் நாள் – காலை – பெருமாள் ஸமுத்ர ஸ்நானத்திற்கு எழுந்தருளல் – பெருமாள், தாயார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், தாயார் ஆஸ்தானம் | மாசிமகம் – ஸ்ரீ A. ஸ்ரீநிவாஸன் – தவனோத்ஸவம் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் நரசிம்மன் |
| 20.02.19 | 8 | ப்ரதமை | புதன் | மகம் | திருமழிசையாழ்வார் | |
| 21.02.19 | 9 | த்விதீயை | வியாழன் | பூரம் / உத்திரம் | காலை – தாயார் உத்ஸவர் திருமஞ் சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ S.V.S. இராகவன் கட்டளை |
| 22.02.19 | 10 | திருதீயை | வெள்ளி | ஹஸ்தம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் திருவீதி புறப்பாடு, பின்பு தாயாருடன் உள் புறப்பாடு | S.S.P.V.D. கைங்கர்ய ட்ரஸ்ட் |
| 23.02.19 | 11 | சதுர்த்தி (18.29) / பஞ்சமி | சனி | சித்திரை | மதுரகவிகள் | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 24.02.19 | 12 | ஷஷ்டி | ஞாயிறு | ஸ்வாதி | காலை – நரசிம்மர் மூலவர், உத்ஸவர் திருமஞ்சனம் | |
| 25.02.19 | 13 | ஸப்தமி | திங்கள் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 26.02.19 | 14 | அஷ்டமி | செவ்வாய் | அனுஷம் | நாதமுனிகள் | |
| 27.02.19 | 15 | நவமி | புதன் | கேட்டை | தொண்டரடிப்பொடிகள் | |
| 28.02.19 | 16 | தசமி | வியாழன் | மூலம் | திருமால்வடை | |
| 01.03.19 | 17 | ஏகாதசி | வெள்ளி | மூலம் | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | M/s. T.V.S. மோட்டார் கம்பெனி |
| 02.03.19 | 18 | ஏகாதசி (19.11) / அதிதி | சனி | பூராடம் | காலை – பெருமாள் திருமஞ் சனம் – மாலை பெருமாள் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ உ.வே. அழிசூர் T. ஸ்ரீனிவாஸாச்சார் – ஸ்ரீ R. இராகவன் |
| 03.03.19 | 19 | த்வாதசி | ஞாயிறு | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 04.03.19 | 20 | த்ரயோதசி | திங்கள் | ச்ரவணம் | காலை – பெருமாள், தேசிகன் திருமஞ்சனம் – மாலை – பெருமாள் தேசிகன் திருவீதி புறப்பாடு | ஸ்ரீ T.C. ஸ்ரீநிவாஸன் |
| 05.03.19 | 21 | சதுர்த்தசி | செவ்வாய் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 06.03.19 | 22 | அமாவாசை | புதன் | சதயம் | காலை – பெருமாள், பேயாழ்வார் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், பேயாழ்வார் திருவீதி புறப்பாடு | அமாவாசை – ஸ்ரீ N.R.S. ஸ்ரீராமன் – சதயம் – ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அஸோஸியேஷன் |
| 07.03.19 | 23 | ப்ரதமை | வியாழன் | பூரட்டாதி | திருமால்வடை | |
| 08.03.19 | 24 | த்விதீயை | வெள்ளி | உத்திரட்டாதி | காலை – பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை – தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீமதி S. காயத்ரி |
| 09.03.19 | 25 | திருதீயை | சனி | ரேவதி | திருமால்வடை | |
| 10.03.19 | 26 | சதுர்த்தி | ஞாயிறு | அச்வினி | திருமால்வடை | |
| 11.03.19 | 27 | பஞ்சமி | திங்கள் | பரணி | திருமால்வடை | |
| 12.03.19 | 28 | ஷஷ்டி | செவ்வாய் | கார்த்திகை | திருமங்கையாழ்வார் | |
| 13.03.19 | 29 | ஸப்தமி | புதன் | ரோஹிணி | கண்ணன், திருப்பாணாழ்வார் ஆஸ்தானம் | |
| 14.03.19 | 30 | அஷ்டமி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம் – காலை – பெருமாள், திருக்கச்சி நம்பிகள் திருமஞ்சனம் – மாலை – பெருமாள், திருக்கச்சி நம்பிகள் திருவீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ உ.வே. அழிசூர் T. ஸ்ரீனிவாஸாச்சார் |

# அரங்கன் அடியிணை தங்கு சிந்தையன்


ஸ்ரீ உ.வே. திருவயிந்தை திருவாழி க்ருஷ்ணதேசிகாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்.

பகவதநுபவத்தின் ரஸத்தையும், பாகவத பெருமையையும் காட்ட எம்பெருமான் தன்னுடைய ஸங்கல்ப விசேஷத்தினால் பல அவதாரங்களைச் செய்தாலும், அதில் த்ருப்தி அடையாதவனாய், ஆழ்வாராதிகளை அவதரிக்கச் செய்து, அவர்கள் மூலம் அவன் திருவடி கைங்கர்யம் கிடைக்கவும், நிலைக்கவும் யாது செய்ய வேண்டும் என்று எண்ணி, வேதக் கருத்துக்களை திவ்யஸூக்திகளாக போதித்து ஆச்ரிதர்கள் உஜ்ஜீவிக்க பேருபகாரம் செய்ததை லோகம் அறியும்.

தன் ஆச்ரித ஸுலபத்வத்தைக் காட்ட நித்ய விபூதியைவிட்டு இறங்கி, ''பக்திப் பயிர் வளர்க்கவே'' திருவரங்கத்தில் கோயில் கொண்டு பல ஆழ்வார்களையும், ஆசார்யர்களையும் தன் திருவடிபால் ஈர்த்தவன் அவன். அந்த வழியில் திருவரங்கன் திருவடியில் பக்தியையும், பாகவதர்களின்பால் பரமபக்தியையும் போதிக்க மாசிபுனர்வஸுவில்அவதரித்தவர்''குடப்பாம்பில் கையிட்ட'' நம் குலசேகரன்.

இவர் பூர்வத்தில் அரசனாக இருந்து பின்பு தனது ஸ்ரீ ராம பக்தியின் காரணமாக திருவரங்கன் திருவடியே தமக்கு தஞ்சம், அதுவே தனது சிந்தை தங்கும் இடம் என்று எண்ணி அவன்பால் மிகுந்த பக்தி பண்ணிய ஆழ்வார் ஆவார். இவர் அருளிச்செய்த ''பெருமாள் திருமொழி'' 105 பாசுரங்கள் கொண்டது. ''அகடித கடநா ஸாமர்த்யனான'' நம்பெருமாள் பற்றி முதல் மூன்று பதிகங்களில் மனமுருகி அருளிச் செய்கிறார்.





முதல் பதிகமான ''இருளிரியச் சுடர்மணி களில்'' அனந்தாழ்வானின் திருமேனி வர்ணனை யைக் கூறி, கருமணியான நம்பெருமாளைக் கண்டு களிப்பது எந்நாள்! என்கிறார். காயாம்பூ தரித்துக் கொண்டிருப்பவனான அரங்கனை மனத்தூண் பற்றி நின்று ''வாயவனை அல்லது வாழ்த்தாது'' என்றபடி, தன் வாயார வாழ்த்துவது என்று! எனக் கேட்கிறார்.

பின்பு, சதுர்முகனால் ஆராதிக்கப்படும் திருவரங்கனின்திருவடிகளுக்குஅடிமைசெய்யும் அடியார்களை தாம் அணுகும் நாள் எந்நாளோ என்றும், மாவாய் பிளந்து கோவர்தனதாரம் பண்ணி ஸௌலப்யத்தைக் காட்டியவனின் திருவடிகளில் தன் கைகளால் மலர்களிட்டு அர்ச்சிப்பது எப்போது! என்கிறார்.

நாரதன், தும்புரு ஆகியோர் இன்னிசையால் துதிப்பவனும், அயனான பிரமன் அநாதியான வேதத்தைக் கொண்டு வணங்குபவனுமான திருவரங்க மணிவண்ணனின் மலர்ச்சென்னியை அடியேன் வணங்குவது எந்நாள்! என்றும், இந்திரன், தேவர்கள், அரம்பை, மதி நிறைந்த ரிஷிகணங்கள் வரிசைகட்டிக் கொண்டு மலர்கள் தூவி வணக்கும் ஒளிமதித் திருமுகமுடைய கமலக்கண்ணனைக் கண்டு என் மனம் உருகுவது எப்போது! என்கிறார்.

''நாள்தொறும் ஏக சிந்தையனாய்'' இந்த்ரியங்களை அடக்கி, பக்தியோக நிஷ்டர்கள் தொழும் மாயோனைக் கண்டு என் அகம் நெகிழ்தல் எப்போது! என்கிறார். எம்பெருமானின் பஞ்சாயுதங்களும், கடும் பறவையான, வேதாத்மா கருத்மானும் காவல் நிற்கும் திருவரங்கத்தில் பள்ளிகொண்ட மாலோனிடம் தான் இன்பக்கலவி கொள்வது எப்போது! என்கிறார்.

பரம பாகவதர்களான தொண்டர்கள், ஆராத பகவத்காதலால்கண்ணீருடன்குழாமாகபெருமை களைப் பாடி ஏத்தும்படி நிற்கும் ஆழியானை தான் கண்டு துள்ளுவது எப்போது! என்றும், தென்திசை நோக்கிப் பள்ளி கொண்ட திருவரங்கனின் திருமுற்றத்து அடியார்களுடனமரும் நாள் எந்நாள்! என்றும், இப்படி பெருமைகளைப் பேசுபவர் நாரணனின் திருவடிக்கீழ் நலமுற இருப்பர் என்றும் அருளிச்செய்கிறார்.

பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலம் பரமபாகவதர்களிடம் நாம் செய்யும் கைங்கர்யம் தான் என்பது நம் பூர்வாசார்யர்களின் அருளிச் செயல். இதையே நம் சடகோபனும் ''பயிலும் சுடரொளி'', ''நெடுமாற்கடிமை'' பதிகங்களில் பாகவத கைங்கர்யம் பற்றி பரக்க ஸாதித்துள்ளார். ஆகவே நம்மாழ்வாரின் திருவுள்ளப்படி, கோழிக்கோன் குலசேகரனும், பகவானிடம் அன்பு கொண்டவர்கள், அவன் திருவடியை தினம் தொழும் பாகவதர்களிடமும் பக்தி கொள்ளவேண்டும் என்று அருளிச்செய்கிறார்.

''தேட்டருந்திறல்'' பதிகத்தில் மாதுவாழ் மார்பினனான திருவரங்கனை வாழ்த்தி அயர்வெய்தும் அடியார்களைக் கூடுவதே தமது கண் பெற்ற பயன் என்றும், ஆநிரைமேய்த்து, ஏழுமாமரம் முறித்தவனை நினைத்துக் கொண்டு ஆடிப்பாடும் திருவரங்கத் தொண்டர்களின் திருவடிப்பொடிகள் கங்கா ஸ்நானத்தைவிடவும் சிறந்தது என்றும், மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாய் இவ்வுலகைக் கீண்டதையும், ஏழு எருதுகளை அடக்கியதையும், மாணிக்குறளுரு வாய் உலகளந்ததையும் பாடிக்கொண்டு திரியும் பக்தர்களின் திருக்கண்களிலிருந்து பொன்னியாறு போன்று வரும் கண்ணீரினால் அரங்கன் கோயில் திருமுற்றத்தை சேறுசெய்யும் தொண்டர் சேவடியின் செழுஞ்சேற்றை தன் சிரசில் அணிவேன் என்றார்.

## மாசி மாதத்தில் முக்கிய உத்ஸவங்கள்

**குலசேகர ஆழ்வார் திருநக்ஷத்ரம்**
பிப்ரவரி 17 (ஞாயிறு)

**தவநோத்ஸவம் (மூன்று நாட்கள்)**
பிப்ரவரி 17 (ஞாயிறு) முதல் 19 (செவ்வாய்) வரை

**மாசி பௌர்ணமி - ஸமுத்ர ஸ்நானம்**
பிப்ரவரி 19 (செவ்வாய்)

**ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி அர்ச்சனை உத்ஸவம்**
பிப்ரவரி 23 (சனி) - விசேஷ திருமஞ்சனம்
பிப்ரவரி 24 (ஞாயிறு) - ஸங்கல்ப அர்ச்சனை

**ச்ரவணம்**
மார்ச் 4 (திங்கள்)

**திருக்கச்சி நம்பிகள் திருநக்ஷத்ரம்**
மார்ச் 14 (வியாழன்)



க்ருஷ்ணாவதார பெருமையை, தங்களின் நாத்தழும்பேறப் பிதற்றும் தொண்டர்களின் சேவடியை ஏத்துவேன் என்றும், மதிள் இலங்கையை அழித்த ராமபிரானின் சரித்ரம் பேசும் அடியார்களை நினைத்து அவரது மனம் மெய்சிலிர்க்கும் என்றும், திருவரங்கன் திருவடிகளில் காதல் செய்யும் பக்தர்களிடமே தன் மனம் பக்தி பண்ணும் என்றும், பெருஞ்சுடராகி நிற்கும் திருவரங்கனை சேரும் நெஞ்சினரான அடியார்களிடம் அன்பு காட்டுவேன் என்றும், கடல் கிடந்த மலர்க் கண்ணனுக்கு மாலையிடுபவர்களிடம் என் மனம் மயங்கும் என்றும், திருவரங்கன் அடியார்களே பித்தர்கள் என்றும், அரங்கனின் திருவடிகளில் பக்தி செய்யும் மெய்யடியார்களிடம் பக்தி பண்ணுபவர்கள் அடியார்க்கு அடியாராவர் என்றும் அருளிச்செய்து தானும் அப்படியே ஆவேன் என்கிறார்.

பின்நாளில் அவதரித்த ஆழ்வார்களான பெரியாழ்வாரும், திருமங்கை மன்னனும், குலசேகரனின் அடியொற்றியே, ''பேசுவார் அடியார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே'' என்றும், ''தண்சேறை எம்பெருமான் தாள் தொழுவார் என் தலைமேலார்'' என்றும் முறையே அருளிச்செய்து போந்தார்கள்.

நம் தூப்புல் பிள்ளையான ஸ்வாமி தேசிகனும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம் 'புருஷார்த்த காஷ்டாதிகாரத்தில்' ''மம மத் பக்த பக்தேஷு ப்ரீதி: அப்யதிகா பவேத்| தஸ்மாத் மத் பக்த பக்தாச்ச பூஜநீயா விசேஷத:||'' என்று ஸாதித்து பாகவத விசேஷத்தையே அறிவுறுத்துகிறார்.

நம்கூடஸ்தரான நம்மாழ்வார் ''ஒருநாயகமாய்'' பதிகத்தில் உலக விஷயங்கள் அனைத்தும் அபுருஷார்த்தம் என்று ஸாதித்து, ''திருநாரணன் தாளே'' உய்யும் வகை என்று அருளிச்செய்தார்.

அதே ரீதியில், குலசேகரபெருமானும், ''மெய்யில் வாழ்க்கை'' பதிகத்தில், பொய்யான இந்த வாழ்வை வெறுத்து, பெண்களிடம் பித்தை ஒதுக்கி, ப்ரியமான அன்ன பானம் தவிர்த்து, தர்ம சிந்தையற்றவர்களின் ஸஹவாஹம் ஒழித்து, அரங்கா என்றழையாதவர் பேயர் என்று கூறி அவர்களை முற்றும் துறந்து, தாம் முழுவதும் அரங்கனிடம் மயங்கி, பித்தனாகி, பக்தனாகி, அவனை அத்தா என்று அழைத்து, ''அரங்கன் அடியிணை தங்கும் சிந்தையனாய்'' இருந்தார். இவ்வண்ணம் இருப்பவர்களுக்கு ஒரு துன்பமும் வருவது இல்லை என்று அருளிச்செய்கிறார்.

எனவே, அடியார்களான நாமும், குடதிசை முடியை வைத்து தென் திசை நோக்கிப் பள்ளி கொண்டு செவ்வரியோடிய பெரியவாய கண்களால் நம்மை ஈர்க்கும் அரங்க அழகனின் திருமேனியின் அத்புத ஸேவையைக் காணத் திருவரங்கம் செல்வோம் வாரீர்.







போகி புறப்பாடு, திருக்கல்யாண உத்ஸவம்





போகி
திருக்கல்யாண
உத்ஸவம்





பரிவேட்டை உத்ஸவம்











திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்



கூரத்தாழ்வான்
திருநக்ஷத்ரம்



கனு உத்ஸவம் -
திவ்ய தம்பதிகள்,
ஆண்டாள் சேர்த்தி
ஆஸ்தானம்














வனபோஜன உத்ஸவம்













மஹோதயம் புறப்பாடு, ஸமுத்ர ஸ்நானம்













தை வெள்ளிக்கிழமை உத்ஸவம்



திருப்பாவை உபந்யாஸ பூர்த்தி





மழை வேண்டி விராட பர்வம் உபந்யாஸம்

ஸ்ரீ:

# பரதத்வத்தைப் பரக்க உரைக்கும் ஆழ்வார்கள்

ஸ்ரீமதி ரமா ராகவஸிம்ஹன்

ஸ்ரீ வைஷ்ணவம் மிக உயர்ந்த ஒரு தர்மம் ஆகும். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஸ்ரீமந்நாராயணனின் பொருட்டு வகுக்கப்பட்ட நிறைவான நெறிகளைக் கொண்டது ஸ்ரீவைஷ்ணவ தர்மம். இத்தகைய தர்ம நெறிகள் அனைத்தும் அறுதியிட்டு கூறுவது, 'ஸ்ரீமந்நாராயணன் மட்டுமே பரதேவதை. அவனையல்லால் வேறொரு தெய்வத்தை ஸ்ரீவைஷ்ணவர்கள் சரணடைவது என்பது அஹிதமானது' என்பதே ஆகும். இதையே தான் கீதாசார்யனாக அந்த ஸ்ரீமந்நாராயணன் 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்று ஸாதித்தருள்கிறான்.

ஸ்ரீவைஷ்ணவ தர்மத்தின் மூலாதாரமாக விளங்கும் பன்னிரு ஆழ்வார்களும் எம்பெருமானை ஸாக்ஷாத்காரம் பண்ணியவர்கள். பன்னிரு ஆழ்வார்களும் ஸாதித்தருளிய பாசுரங்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழவேண்டிய வாழ்க்கை முறைக்கு ப்ரமாணமாக அமைகின்றன. இத்தகைய பாசுரங்கள் ஒவ்வொன்றும் ஸ்ரீமந்நாராயணனிடத்தே ஆழ்வார்கள் கொண்டிருந்த பக்தியின் ஆழத்தையும் த்ருடத்தையும் ஐயமற விளக்குகின்றன.

தம்மைக் 'கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன்' என்று ஆழ்வார்கள் பெருமாளைப் போற்றிப் புகழ்ந்தாலும், ஆழ்வார்களது பாசுரங்கள் என்னும் மரகதச் சரடில் கட்டுண்டதென்னவோ அந்தப் 'பெருமாயன்' தான். அவ்வாறு கட்டுண்ட அந்த எம்பெருமானின் 'மாம் ஏகம் சரணம் வ்ரஜ' என்ற திருவாக்கிற்கு ஏற்றம் சேர்க்கும் வகையில், 'எம்பெருமானே உயர்ந்த தத்வம்' என்று கட்டியம்



வாரணம் மேல் துயக்கற மால் பரத்துவத்தைத் திறமாகச் செப்பிய பெரியாழ்வார்

கூறும் சிறந்த சொற்கட்டும் அர்த்த புஷ்டியும் நிறைந்த ஆழ்வார் பாசுரங்கள் சிலவற்றின் அழகினை ஸேவித்து உய்வோமாக!

**தொண்டரடிப்பொடியாழ்வார்**

*'தலையறுப் புண்டும் சாவேன் சத்தியம் காண்மின் ஐயா,*
*சிலையினால் இலங்கை செற்ற தேவனே தேவனாவான்'*

ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளில் சரணடைந்த தொண்டர்களின் அடிப்பொடியாகத் தன்னை பாவித்த (எவ்வளவு உயர்ந்த பக்தி நிலை இது!) இந்த வரிகள் திருமாலையில் அமைந்துள்ளன.

'சிலையினாலிலங்கை செற்ற தேவனே தேவனாவான்' - ராமனாக வந்த ஸ்ரீமந்நாராயணன் மட்டுமே பரதேவதை. இதுவே 'சத்தியம் காண்மின் ஐயா'. எவ்வளவு த்ருடமான நம்பிக்கையிருந்தால் 'இது தான் சத்தியம்' என்று ஆழ்வார் ஸாதிப்பார்! இந்த த்ருடத்துக்கு மேலும் த்ருடம் சேர்ப்பது 'தலையறுப் புண்டும் சாவேன்' என்ற வரி. ஆழ்வாரின் திருநாமம் முதற்கொண்டு அவரது பாசுர வரிகள் வரை, அனைத்தும் ஸ்ரீமந்நாராயணனின் பராக்ரமத்தைப் பறைசாற்றுவது, உயர்ந்த பக்தியை ஊறச் செய்யும் ஒரு ஸுகாநுபவமாக அமைகின்றது.

**பெரியாழ்வார்**

ஸ்ரீமந்நாராயணனுக்கே மாமனாரான பெரியாழ்வார் திருவாக்கினில் அமைந்துள்ள த்ருடத்தை ஸேவிப்போம்.

*வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து மண்ணும்*
*மணமும் கொண்மின்*
*கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவினிற்*
*புகுதலொட்டோம்*
*ஏழாட்காலும் பழிப்பு இலோம் நாங்கள் இராக்கதர்*
*வாழ் இலங்கை*
*பாழாள் ஆகப் படை பொருதானுக்குப் பல்லாண்டு*
*கூறுதுமே.*

'கூழாட்பட்டு நின்றீர்களை எங்கள் குழுவில் புகுதலோட்டோம்' என்ற வரியை உற்று நோக்குவோமானால், 'கூழாட்பட்டு' என்ற வார்த்தையின் அர்த்தபுஷ்டி மனதினை உருக்கும். 'கூழாட்பட்டு' என்றால் 'குழம்பிப் போவது' என்று பொருள். எதை நினைந்து இந்தக் குழப்பம்? 'ஸ்ரீமந் நாராயணன் மட்டும் தான் பரதேவதையா அல்லது வேறொரு தேவதாந்த்ரம் உண்டா?' என்று குழப்பம் கொள்வது. ஸ்ரீ விஷ்ணு சித்தன், 'இப்படி ஒரு குழப்பம் கொண்டவரை நாங்கள் எங்கள் குழுவில் சேர்க்கவே மாட்டோம்' என்று அறுதியிட்டு முடித்து விடுகிறார். எவ்வளவு உயர்ந்த த்ருட பக்தி இது!

**நம்மாழ்வார்**

*'கையார் சக்கரத்து என் கரு மாணிக்கமே! என்றென்று*
*பொய்யே கைம்மை சொல்லிப் புறமே புறமே ஆடி*
*மெய்யே பெற்றொழிந்தேன் விதி வாய்க்கின்று*
*காப்பார் ஆர்?'*

'கருமாணிக்கமே' என்று பெருமாளை அற்புதமான சொல்லினால் ஸேவித்து உருகுகிறார். 'கருமாணிக்கமே' என்ற இந்த சொல்லானது, அந்தப் பரமனின் ஈடு இணையில்லாத உயர்வினை எவ்வளவு அழகாகப் பறை சாற்றுகிறது! அவன் மட்டுமே ('ஏகம்') உயர்ந்தவன். அதனால் தான் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனையே சரணடைய வேண்டும்.

'மெய்யே பெற்றொழிந்தேன்': இங்கே மெய் என்பது தேஹத்தை குறிக்க, ஆழ்வாரின் அங்கலாய்ப்பு நன்றாகதெரிகிறது. ஒரு தேஹத்தினைக் கொண்டு இந்த பூமியிலே வந்து ஜனிப்பது என்பது ஒழிந்து போவதற்கு ஸமானமாம். மெய்யான (சத்யமான) விஷயமாம் அந்தப் பரமனிடம் இருந்து நம்மை பிரிக்கும் 'மெய்' (தேஹம்) கொண்டு, இந்த பூமியில் வந்து ஜனிப்பதென்பது ஒழிந்து போவதற்கு ஸமமானது தானே?

''விதி வாய்க்கின்று காப்பார் ஆர்?' என்ற தனது திருவாக்கின் மூலம் ஆழ்வார், 'ஸ்ரீமந்நாராயணனைத் தவிர நம்மைக் காப்பார் வேறாரும் இலர்' என்பதை நிர்தாரணம் பண்ணுகிறார்.



காரிமாறன் சடகோபன்

**ஆண்டாள்**

*‘நாராயணனே நமக்கே பறை தருவான்*
*பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்.’*

‘நாராயணனே’ என்று அவள் ஏகாரத்தில் முடித்திருக்கும் பாங்கானது, வேறெந்த தெய்வமும் இல்லை. நாராயணன் மட்டுமே நமக்கு பறை தர வல்லவன் என்பதினை அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றது.

இதே வரிதனில் ஏகாரத்தில் முடியும் மற்றொரு வார்த்தை, ‘நமக்கே’. இங்கு ‘நமக்கே’ என்பது ஸ்ரீமன் நாராயணனின் திருவடிகளாகிய ‘நமக்கே’ என்ற உயரிய அர்த்தத்தினைக் கொள்கின்றது. ‘ஒருவர் இருவர் தான் என்றில்லை; அவன் திருவடிகளில் அபயம் என்று சரண்புகும் ஒவ்வொருவரையும் தன் ஸங்கல்ப மாத்ரத்தில் காக்கவல்ல மிடுக்கும், கம்பீரமும், ஆற்றலும், காருண்யமும் உடையவன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நாராயணனே’ என்ற பொருளினைக் கொண்டு வருகின்றது.

*‘இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்*
*நம்மையுடையவன் நாராயணன் நம்பி*
*செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி*
*அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ நான்.’*

‘இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்’ - எம்பெருமானின் பரதத்வ ஸ்வரூபத்தை இந்த முதல் வரியின் மூலம் ஸ்ரீ ஆண்டாள் நமக்கு ஸாதித்தருள்கிறாள். இந்தப் பிறவி மட்டுமல்லாமல், ஏழேழ் பிறவிகளுக்கும் நாம் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள வேண்டியது அந்த நாராயணனது பாதாரவிந்தங்கள் தாம் என்பதை எவ்வளவு தெளிவாக உணர்த்துகின்றது கோதை நாச்சியாரின் இந்த வரி!



சூடிக்கொடுத்த சுடர்க்கொடி

‘நம்மையுடையவன் நாராய ணன்நம்பி’ - நாம் அனைவரும் ஸ்ரீமந் நாராயணனுடைய சொத்து. அவனுடைய திருவடிகள். நம்மீது உரிமையுடையவன் ஸ்ரீமந்நாராயணன் மட்டுமே என்பதை எவ்வளவு ஆணித்தரமாக அறுதியிட்டுக் கூறுகின்றது நப்பின்னையின் இந்த நல்வார்த்தைகள்!

*‘‘உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது*
*அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்*
*சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே*
*இறைவா! நீ தாராய் பறை ஏல் ஓர் எம்பாவாய்.’’*

ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளாய்ப் பிறப்பதென்பது கிடைத்தற்கரிய பாக்யம். அதனால் தான் ஸ்ரீ ஆண்டாள் தன்னுடைய இந்தப் பாசுரத்தில் ‘உன்தன்னைப் பிறவி பெருந்தனை புண்ணியம் யாம் உடையோம்‘ என்னு ஸாதிக்கிறாள்.

‘உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது‘ - அவனது சொத்தாக இருப்பது, அவனது திருவடிகளைப் பணிவது, அவனுடைய அடியார் என்று உறவுற்றிருப்பது இவையெல்லாம் பலப்பல ஜன்மாக்களில் நமக்கும் அந்தப் பரமனுக்குமிடையே உருவான ஒரு உயர்ந்த பந்தமாகும். ஒழிக்க முடியாத அவனுடனான இந்த உறவு மட்டும் தானே சாஸ்வதமானது. இந்த வரிகளின் மூலம் ஸ்ரீஆண்டாள், ‘அவன் ஒருவனையே நாம் சரணடைய வேண்டும்’ என்பதை ஐயமறத் தெளிவிக்கின்றாள்.

கோதை நாச்சியாரானவள் மாயக் கண்ணனிடம் ‘எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உந்தன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாமாட்செய்வோம்’ என்று ஸாதிக்கும் போதும், ‘மாம் ஏகம் சரணம் வ்ரஜ’ என்ற எம்பெருமானின் திருவாக்கின் தாக்கம் அழுத்தம் பெறுகின்றது.

பரிபூர்ண சரணாகதி என்பது ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆத்மார்த்தமாகப் பண்ண வேண்டிய விஷயங்களில் தலையாயதாகும். அசஞ்சலமான பக்தியினை தனது பக்தர்களிடத்தே கண்டவிடத்து, அணுக்ஷணமும் தாமதிக்காது அநுக்ரஹம் பண்ணுபவன் ஸ்ரீமந்நாராயணன்.

‘மாம் ஏகம் சரணம் வ்ரஜ’ என்ற அவனது திருவாக்கின்படி, ‘மற்றை நம்காமங்கள் மாற்றேல்’ என்று அவனிடமே பிரார்த்தித்து, நாம் அடைய வேண்டிய உபேயமாகஇருக்கும் ஸ்ரீமந்நாராயணனை அவனையே உபாயமாகக் கொண்டு அடைவோமாக!

ஸ்ரீ:

# அறிவோம் அர்ச்சகரை - 1

## பாதூர் மணி ஸ்வாமி

ஸ்ரீ உ.வே. பாதூர் பரவஸ்து வரதராஜாசார்யர் (மணி) ஸ்வாமி பாதூர் எனும் அக்ரஹாரத்தில் சிறு வயதிலேயே உபநயந ஸம்ஸ்காரங்கள் ஆனதும் அந்த ஸ்ரீ க்ராமத்திலேயே உள்ள அஹோபில மடம் ஓரியண்டல் பள்ளியில் வாசித்தவர்.


பின்பு ஸம்ஸ்ருதத்தில் மேலும் தேர்ச்சி பெற வேண்டி ஸ்ரீ மதுராந்தகம் அஹோபில மடம் பாடசாலையில் ஸ்ரீ உ.வே. பாதூர் ஸரளகவி ராகவாசார்யர் ஸ்வாமி திருவடிவாரத்தில் பயின்று, 1983ம் ஆண்டு வ்யாகரண சிரோமணி பட்டம் பெற்றார்.

மணி ஸ்வாமி அஹோபிலமடம் 44-ம் பட்ட திவ்யாஸ்தானத்தை அலங்கரித்த ஸ்ரீமத் முக்கூர் அழகியசிங்கர் திருவடிவாரத்தில் பஞ்ச ஸம்ஸ்காரமும் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபமும் செய்து, பின்பு ஸ்ரீ உ.வே. பாதூர் கோபாலா சார்யர் ஸ்வாமியிடமும், ஸ்ரீ உ.வே. பாதூர் நரஸிம் ஹாசார்யர் ஸ்வாமியிடமும் ஆஹ்நிகமும் மற்ற அத்யாத்ம காலக்ஷேபங்களும் நன்கு கற்றுணர்ந்தார்.

மேலும் இவர் அஹோபில மடம் 45-ம் பட்டம் ஸ்ரீமத் வில்லிவலம் அழகியசிங்கர் திருவடிவாரத்தில் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார காலக்ஷேபம் செய்து அவருடைய திருவடியிலேயே தமது ஆத்ம ரக்ஷாபரத்தையும் ஸமர்பித்தார்.

ஸ்வாமிக்கு காஞ்சீபுரத்தில் பாஞ்சராத்ர தீக்ஷை ஸம்ஸாரகாரம் ஆன பின்பு, ஸ்ரீ உ.வே. அழிசூர் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமியிடமும், ஸ்ரீ உ.வே. நெல்வாய் வரதாசார்யர் ஸ்வாமியிடமும் ஸ்ரீபாஞ்சராத்ர ஸம்ஹிதைகளான பாத்மம், ஜயாக்யம் ஆகியவற்றை அதிகரித்து அதன் பயனாக பல எம்பெருமான்களுக்குக் கைங்கர்யம் செய்யும் பாக்யம் ப்ராப்தமாயிற்று.

இந்த ஸ்வாமி 17 வருடங்களுக்கு மேலாக நம் தேவஸ்தானத்தில் அர்ச்சக கைங்கர்யம் செய்து



நம் ஸ்ரீநிவாஸப் பெருமாளின் ப்ரஹ்மோத்ஸவம், பவித்ரோத்ஸவம் போன்றவற்றில் ரக்ஷாபந்தநம் பண்ணிக்கொண்டு பெருமாள், பிராட்டி, ஆழ்வார், ஸ்வாமி தேசிகன் க்ருபைகளைப் பெற்று கைங்கர்யத்தை செவ்வனே செய்து வருகிறார்.

இவர் ஸம்ஸ்க்ருதத்தில் ச்லோகங்கள் செய்வதில் வல்லவர். நம் எம்பெருமானிடத்திலும் ஸ்வாமி தேசிகனிடத்திலும் விசேஷ பக்தி கொண்ட இவர் அவர்களின் பொருட்டு ச்லோகங்கள் இயற்றியுள்ளார்.

இந்த ஸ்வாமி மேலும் பல வருடங்கள் நம் ஸந்நிதியில் அர்ச்சக கைங்கர்யம் செய்ய வேணுமாய் திவ்ய தம்பதிகளை ப்ரார்த்திப்போம்.

ஸ்ரீ:

# அறிவோம் அர்ச்சகரை - 2

## நாவல்பாக்கம் பத்ரி ஸ்வாமி



ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் சதுர்வேத சதக்ரது பத்ரிநாராயண தாதாசார்யர் ஸ்வாமி 12 வருடங்களுக்கு மேலாக நம் ஸன்னிதியில் அர்ச்சக கைங்கர்யம் செய்து வருபவர். இந்த ஸ்வாமி தம்முடைய திருத்தகப்பனார் ஸ்வாமியிடமே பஞ்ச ஸம்ஸ்காரம் செய்து வைஷ்ணவ தீக்ஷை பெற்றவர்.

மேலும் ஜகத் விக்யாதராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் சதுர்வேத சதக்ரது அய்யா தேவநாத தாதயார்ய மஹாதேசிகனிடத்தில் தம்முடைய ஆத்ம ரக்ஷாபரத்தை ஸமர்ப்பித்து க்ருதக்ருத்யரானார்.

இந்த ஸ்வாமி மதுராந்தகம் அஹோபில மடம் வித்யாலயத்தில் ஸ்ரீ உ.வே. பழவேரி பட்டண்ணா ஸ்வாமி ஸந்நிதியில் திவ்யப்ரபந்தம் அத்யயநம் செய்தவர்.

ஸ்ரீ பத்ரி ஸ்வாமி பெருமாள் கோயிலில் பாஞ்ச ராத்ர தீக்ஷை பெற்று பல தேவஸ்தானங்களில் கைங்கர்யம் செய்தவர். நம் ஸந்நிதியின் அர்ச்சகர் ஸ்ரீ உ.வே. பாதூர் மணி ஸ்வாமியிடம் ஆகம ப்ரயோகம் கற்றவர்.

இந்த ஸ்வாமியின் பிதாமஹர் ஸ்ரீ உ.வே. சூளை ராகவாசார்யர் ஸ்வாமியும், இவருடைய தகப்பனார் ஸ்ரீ உ.வே. செல்லு ஸ்வாமியும், சிறிய தகப்பனார் ஸ்ரீ உ.வே. ராஜாமணி ஸ்வாமியும் நம் ஸந்நிதியில் அத்யந்த கைங்கர்யங்கள் பண்ணிப் போந்தார்கள்.

இவரும் தம்முடைய பூர்வர்களைப்போல் நம் எம்பெருமானிடமும், ஸ்வாமி தேசிகனிடமும் அத்யந்த பக்தி கொண்டு அர்ச்சித்து வருகிறார். அவர்களைப் போன்றே வாஹந உத்ஸவங்களில் பட்டறையில் அநாயாஸமாக திருக்குடை கைங்கர்யம் செய்து வருகிறார்.

பெருமாளுக்கு அலங்காரம் செய்வதிலும் நல்ல திறன் கொண்டவர். நல்ல உத்ஸாஹத்துடன் எம்பெருமானின் அனைத்து கைங்கர்யங்களிலும் அந்வயிக்கும் இவர், அர்ச்சனை செய்யும் போது திருநாமங்களை ராகங்களுடன் நன்கு உச்சரிக்கும் பாங்கு பக்தர்களை பரவசப் படுத்தும்.

இந்த ஸ்வாமி நல்ல ஆரோக்யத்துடன் மேலும் பல ஆண்டுகள் கைங்கர்யம் செய்ய வேணுமாய் திவ்ய தம்பதிகளை ப்ரார்த்திப்போம்.

**தொகுப்பு:**

**ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி**

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

(ஸுமதியும், அண்ணா ஸுந்தரராஜனும் ஸாயங்காலம் பெருமாள்ஸந்நிதியில்வழக்கம்போல்ஸேவித்துவிட்டு ஸ்தோத்ரங்கள் சொல்கிறார்கள்; முடிந்த பிறகு பெரியவர்களை ஸேவிக்கிறார்கள்)

**பங்கஜம் பாட்டீ:** தீர்க்காயுஸா இருக்கணும்! இன்னிக்கி என்ன ஸ்தோத்ரம் சொன்னேள்?

**ஸுமதி:** 'ஸ்ரீமந் லக்ஷ்மண' பாட்டீ!

**பாட்டீ:** (சிரிச்சிண்டே) ரொம்ப ஸந்தோஷம். நீங்க இப்போ கொஞ்சம் பெரியவாளா ஆயிட்டேள்; அதனால, கேட்டா ஸ்தோத்ரத்தோட முதல் அடியச் சொல்றத்துக்கு பதிலா, பேரைச் சொல்லணும், ஸரியா?

**ஸுந்தரராஜன்:** அது என்ன பாட்டீ! தாத்தாகூட இன்னிக்கி 'தேசிகனோட மங்களம் சொல்லுங் கோ'-ன்னுதான் சொன்னா!

**பாட்டீ:** அது ஸரி; ஒங்களுக்கு சட்டுனு புரியணம்-ங்க்றத்துக்காக அப்படி சொன்னா. அந்த ஸ்தோத்ரத்தப் பண்ண 'குமார வரதாசாரியரே' கடசீ ச்லோகத்தில ''வேதாந்தாசார்ய மங்களம்''-ன்னு பேர் வைச்சுட்டார். அதனால, அந்தப் பேரையே வெச்சு சொல்லலாம்.

**ஸுந்தரராஜன்:** இனிமே அப்படியே சொல்றோம் பாட்டீ! இன்னொண்ணு பாட்டீ! ஸ்தோத்ரத்த மட்டும் சொல்லிக்குடுத்தபடியே, நாங்க சொல்றோம். அத யார் பண்ணா? யாரைப் பத்தினது? என்னன்னு சொல்றா? ஸம்ஸ்க்ருத்தில வேற இருக்கா; எங்களுக்குப் புரியல, பாட்டீ! நாங்க தெரிஞ்சுக்கலாமா!!

**பாட்டீ:** நன்னா தெரிஞ்சுக்கலாம்; கேக்கறேளே, ரொம்ப ஸந்தோஷம். சின்னதா சொல்றேன்; கவனமா கேட்டுக்கோங்கோ–

இது பதிமூணே ச்லோகங்கள்கொண்ட ஒரு சின்ன ஸ்தோத்ரம். 'அநுஷ்டுப்'-ங்க்ற விருத்தத்தில அமைஞ்சது – அதாவது ஒவ்வொரு பாதமும் எட்டே எழுத்துக்கள் கொண்டவை. இதனால, கொழந்தகள்கூட ஸுலபமா சொல்லலாம்.

இதப் பண்ணவர், ஸ்வாமி தேசிகனோட திருக்குமாரர், வரதாசார்யர். தேசிகனப்பத்தி ஸம்ஸ்க்ருதத்திலே பண்ணியிருக்கார். இதேபோலவே, தமிழிலும் பண்ணியிருக்கார்.

**ஸுமதி:** அதுதானே 'மாமலர்'-னு ஆரம்பிக்கிற 'பிள்ளையந்தாதி', பாட்டீ?

**பாட்டீ:** ரொம்ப ஸரி.

**ஸுந்தரராஜன்:** ஸாரி பாட்டீ, குறுக்க பேசறத்துக்கு. அப்பாவைப் பத்தி, பிள்ளையே சொல்றது, அவ்வளவு ஒசத்தியாகுமா!

**பாட்டீ:** (சிரிச்சிண்டே) ஆமா; லோகத்தில இருக்கறவா அப்படித்தான் நெனப்பா. வரதாசார்யர் தேசிகனப் பாடினதுக்கு, அப்பா-ங்க்றது மட்டும் காரணம் இல்ல; பன்னிரெண்டாவது ச்லோகத்திலே சொல்லப் போறார்; அங்கே பாப்போம். இப்போ, மொதல்லேர்ந்து ச்லோகத்தோட அர்த்தத்தைத் தமிழ்-ல சொல்றேன்.

எந்த ஸ்தோத்ரத்தையும் ஆரம்பிப்பதற்கு முன்னாடி,

*'ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ|*
*வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி||'*

–ங்க்ற ச்லோகத்தை சொல்லிட்டுத் தொடங்க்றதுதான் நம் பெரியவாளோட வழக்கம். இது, ஸ்வாமி தேசிகன் பேர்-ல வரதாசாரியர் பண்ணின தனியன். இதை, ஸ்வாமியினுடய ஸம்ஸ்க்ருத ஸ்ரீஸூக்திகளை ஸேவிப்பதற்கு முன்னாடி ஸேவிக்கும்படி, அவரே நியமிச்சது. இதன் பொருள்:-

''எல்லா கல்யாணகுணங்களும் பொருந்தியவரும்; கவிகளுக்குள்ளும் / வாதியர்களுக்கு எதிரிலும் சிங்கம் போன்றவரும் / வேதாந்தமான உபநிஷத்துக்களின் பொருளை நன்கு அறிந்து, மற்றவர்க்கும் உபதேசம் செய்யும் ஆசார்யர்களுக்குள் தலைசிறந்தவருமான வேங்கடநாதன் என்பவர், என் மனதில் எப்போதும் குடிகொண்டிருப்பாராக''.

இந்த ச்லோகத்தோட அர்த்த-விசேஷங்கள் பலப்பல.. சொல்லிண்டே போகலாம். ஒங்களுக்குப் புரியற மாதிரி ரெண்டு சொல்றேன்; கேளுங்கோ –

1) முன்னாடி ஒருதடவை, நான் ஒங்களுக்கு சொல்லிருக்கேன் – தேசிகனுக்கு மூணு விருதங்கள் உண்டு; ஒண்ணு, எம்பெருமான் அரங்கன் அளிச்ச 'வேதாந்தாசார்யன்'; இரண்டு, பிராட்டி இட்ட 'ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்'; மூன்று வைணவப் பெரியோர்கள் வெச்ச 'கவிதார்க்கிகஸிம்ஹம்' என்று. இந்த ச்லோகம் இந்த மூணையும் குறிக்கறது – எப்படீன்னா:

- வேதாந்தாசார்யன் – ங்க்றதை, வேதாந்தா சார்யவர்ய: என்றும்;
- கவிதார்க்கிகஸிம்ஹம் – ங்க்றதை, கவிதார்க்கிக கேஸரீ என்றும்;
- ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர்–ங்க்றதை, சுருக்கமா ஸ்ரீமாந் என்றும் சொல்றது.

2) ஸ்வாமி நம்மாழ்வார், திருவாய்மொழித் தொடக்கத்தில், 'அவன் சுடரடி

தொழுது எழு' -னு தன் மனதுக்கு உபதேசம் செய்யறார். அமுதனார், நூற்றந்தாதி தொடக்கத்தில், 'நெஞ்சே சொல்லுவோம் அவன் நாமங்களே', என்கிறார். இவற்றை ஒட்டியே, இந்த ச்லோகமும் 'மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி' அப்படீங்க்றது.

இனி, ஸ்தோத்ரத்துக்கு வருவோம்.

*''ஸ்ரீமல்லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜய த்வஜம்|*
*விச்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே||''*

இந்த ச்லோகத்தால், குமாரவரதாசார்யர் எனும் நயினாராசார்யர் ஸேவிக்கப்படுகிறார்– 'ஸ்ரீபாஷ்ய காரருடைய கொள்கைகள் எனும் அரண்மனையின் வெற்றிக் கொடிபோன்றவரும்; கௌசிக கோத்ரத்தில் உதித்தவருமான வரதாசார்யரை நான் நமஸ்கரிக் கிறேன்', என்பது இதன் அர்த்தம்.

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! நீங்க ஸ்வாமி தேசிகனைப் பத்தின மங்களத்துக்கு பொருள் சொல்றேன்னு சொன்னேள். கீழே சொன்ன ச்லோகம் அவரைப் பத்தி இல்லையே; வரதாசார்யரைப் பத்தினதுதானே. என்ன பொருத்தம்?

**பாட்டீ:** பொருத்தம்தான்; இப்போ, திருப்பல்லாண்டு ஸேவிக்கறேளே, மொதல்ல 'ராமாநுஜ தயாபாத்ரம்..' முதலான பொதுத்தனியன்களையும்; 'குருமுகம் அநதீத்ய ...; மின்னார் தடமதிள்... / பாண்டியன் கொண்டாட ...' போன்ற அந்த ப்ரபந்தத்துக்கான தனியன்களையும் சொல்லிட்டுத்தானே ஆரம்பிக்கறேள்; அது போலத்தான் இதுவும்; 'வேதாந்தாசார்யர் மங்களத்தை' ஆரம்பிக்கறத்துக்கு முன்னால, அதன் ஆசிரியரான வரதாசார்யரை வணங்கிவிட்டு, தொடங்குகிறோம்.

**இதன் அர்த்தவிசேஷங்கள் இவ்வாறாம்:** ஸ்ரீபாஷ்ய காரருடைய கொள்கைகள் (ஸித்தாந்தம் என்பது ஒரு உயர்ந்த அரண்மனைக்கு ஒப்பிடப்படுகிறது. அரண்மனை என்றாலே, - ஒரு அரசன் / அதை அழிக்கமுயலும் விரோதிகள், அதைக் காப்பாற்றும் வீரர்கள், இருவருக்கும் போர், ஜெயித்தவர் வெற்றிக்கொடி பறக்கவிடுவது முதலானவை - உண்டல்லவா! அதுபோல வரதாசார்யர், பிறமதக் கொள்கைகளை வாதப்போரில் வென்று பறைசாற்றும் வெற்றிக்கொடியாக உருவகப்படுத்தப்படுகிறார்.

இவ்வளவு திறன் அவரிடம் எப்படி அமைந்தது? -ங்க்றத்துக்கு விடையா, அவர் விச்வாமித்ரரின் குலத்தில் தோன்றியவர், என்கிறது. விச்வாமித்ரர் பெரும் வீரராக இருந்தது; ப்ரஹ்மரிஷி வஸிஷ்டரோடு போர் புரிந்து தோற்றது; பிறகு மாதவம் புரிந்து அந்தணராக மாறியதோடு, வஸிஷ்டர் வாயாலேயே 'ப்ரஹ்மரிஷி' எனப் பட்டம் பெற்றது – இவற்றுக்கு சரித்ரமே சான்று. 'புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா? விச்வாமித்ரரின் வழித்தோன்றலான வரதாசார்யரும், வாதியரை வெல்லும் வெற்றிக் கொடியாக விளங்குகிறார், என்கிறது.

இனி, ஸ்தோத்ரத்தின் முதல் ச்லோகம்:

*''ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவிவாதிநாம்|*
*வேதாந்தாசார்யவர்யாய வேங்கடேசாய மங்களம்||''* [1]

**இதன் திரண்ட பொருள்:** 'கலைகள் அனைத்திலும் வல்லவரும் / கவிகளுக்குள் மிடுக்குள்ளவரும் / வாதியர்களுக்கு அச்சம் கொடுப்பவரும் / உபநிடதங்களில் தேர்ச்சிபெற்ற ஆசானுமான, வேங்கடேசனுக்கு நன்மைகள் அனைத்தும் உரித்தாகுக' – என்பதாம்.

இதன் விசேஷப் பொருள்களை, அடுத்த ஸஞ்சி கையில் காண்போம்.

(தொடரும்...)

**Sponsorships and donations towards publication expenses are welcome**



*With Best Compliments from:*

**Sevilimedu Raghavan,**
**41-A, Seethammal Road,**
**Chennai 600018.**

**&**

**Another Devotee,**
**Mylapore,**
**Chennai 600004.**

**SVDD thanks Sri Sevilimedu Raghavan & Another Devotee**
for sponsoring this month's issue of Desika Sandesam

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

4, கேசவப்பெருமாள் சன்னதி தெரு,மயிலாப்பூர், சென்னை-600 004
☎ 2495 3799 ★ Email: svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com

பூமிதேவ்யாம் ஸமுத்பூதம் அம்ருதோகைஶ்சஸம்ப்லுதம் ।
ரிஷிகந்தர்வ தேவாதி விமோஹந நமோஸ்துதே ॥

## தமநிகோத்ஸவ (தவனோத்ஸவ) பத்திரிகை - 2019

திருமலை மேல் நின்ற திருவேங்கடவன் (ஸ்ரீபேயாழ்வார் திருஅவதார ஸ்தலமாகிய) மாடமாமயிலையில் சேதனர்கள் வழுவிலாவடிமை செய்யும்படி ஸ்ரீஅலர்மேல்மங்கை தாயாரோடு எழுந்தருளியிருப்பது ப்ரஸித்தம். இத்திவ்யதம்பதிகளுக்கு வருடந்தோறும் மாசி மாதம் தவனோத்ஸவம் செய்து, மங்களாசாஸனம் செய்வது வழக்கம். இவ்வுத்ஸவம் மாசி மாதத்திற்கேற்ற உபசார உத்ஸவமாகும். தேவாதி தேவர்கள், ரிஷிகள், கந்தர்வர்கள் முதலியோர் பூஜிக்கும் உத்ஸவமாகும். இவ்வுத்ஸவத்தில் எம்பெருமானையும், தாயாரையும் சௌகந்த மலர்களினாலும், தவனத்தினாலும் அலங்கரித்து, அர்ச்சிக்க வேணும்.

இவ்வருடமும் அவ்வாறே விளம்பி ஞு **மாசி மீ 5 முதல் 7 வரை (17.02.2019 - 19.02.2019)** மேற்படி உத்ஸவத்தை செய்விக்க பாகவதோத்தமர்கள் ஸங்கல்பித்திருக்கிறார்கள். ஆஸ்திகர்கள் யாவரும் இம்மஹோத்ஸவத்தில் அந்வயித்து, இம்மையிலும் மறுமையிலும் அந்யோந்யம் ஏற்படுத்தும் மாமயிலை திவ்யதம்பதிகளான ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸப்பெருமாள், ஸ்ரீ பேயாழ்வார் மற்றும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனின் க்ருபாகடாக்ஷத்திற்கு பாத்திரர்களாக வேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

## உத்ஸவ விவரம்

*காலை 10:00 மணி :* பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம்

*மாலை 06:30 மணி :* பெருமாள், தாயார் உத்ஸவர் ஆஸ்தானம்

*மாலை 06:30 மணி :* இன்னிசைக் கச்சேரி *(16.02.2019 முதல் 19.02.2019 வரை)*

**குறிப்பு: ஸ்ரீ பெருமாள் 19.02.2019 காலை 5.30 மணிக்கு ஸமுத்திர ஸ்நானத்திற்கு எழுந்தருளல்**

| நாள் | இசைக்கலைஞர்கள் |
|---|---|
| *16.02.2019*<br>சனி | **கலைமாமணி ஸ்ரீமதி கோபிகா வர்மா** மற்றும் **'தாஸ்யம்'** மாணவர்கள்<br>**- மோகினியாட்டம்** |
| *17.02.2019*<br>ஞாயிறு | **(மாலை 04.00 முதல் 06.00 வரை)**<br>**முனைவர் ஸ்ரீமதி சுபாஷினி பார்த்தசாரதி** மற்றும் குழுவினர் - **வாய்ப்பாட்டு** |
| *18.02.2019*<br>திங்கள் | **வயலின் - நாதஸ்வரம் - ஜுகல்பந்தி**<br>ஸ்ரீமதி ஷ்ரேயா தேவ்நாத் - வயலின்<br>மயிலை ஸ்ரீ. கார்த்திகேயன் - நாதஸ்வரம்<br>ஸ்ரீ. ப்ரவீண் ஸ்பர்ஷ் - மிருதங்கம்<br>ஸ்ரீ. R. ஜீவானந்தம் - தவில் |
| *19.02.2019*<br>செவ்வாய் | **ஸ்ரீ. R.P. ஷ்ரவன்** மற்றும் குழுவினர் - **வாய்ப்பாட்டு** |

இசை நிகழ்ச்சிகள் அனைத்தும் ''அமரர்கள் ஸ்ரீ.P.ஓபுல் ரெட்டி மற்றும் P.ஞானாம்பா'' நினைவாக ஸ்ரீ. P. விஜயகுமார் ரெட்டி மற்றும் ஸ்ரீமதி ப்ரீதா ரெட்டி அவர்களால் உபயம் செய்யப்படுகிறது.

R.முகுந்தன், P.சேஷாத்ரி, N.கஸ்தூரிரங்கன் - தர்மகர்த்தாக்கள்

ஸ்ரீ:

ஸ்ரீஅலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ருஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:


## ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

4, கேசவப்பெருமாள் சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை-600 004

☎2495 3799 ★ Email:svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com


# ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை



**23.2.2019 (சனி)**

**விசேஷ திருமஞ்ஜனம்**

காலை 8:00 மணி

**24.2.2019 (ஞாயிறு)**

**வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை**

காலை 8:00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம்

மாலை 4:00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம்

ஆஸ்திகர்கள் மேற்படி உத்ஸவத்தில் அன்வயித்து மாமயிலை திவ்யதம்பதிகள், ஸ்ரீலக்ஷ்மி ஹயக்ரீவர், ஆழ்வார் ஆசார்யர்கள் அநுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகும்படி ப்ரார்த்திக்கப்படுகிறார்கள்.

நன்கொடை
ரூ. 200/-

R.முகுந்தன், P.சேஷாத்ரி, N. கஸ்தூரிரங்கன்
தர்மகர்த்தாக்கள்